அ.வ.எண்: **120/2012** நாள்: **26.02.2026**

பி.வா.சா.2 – முத்தையா

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனது சொந்த ஊரான மாவிடுதிகோட்டை கிராமத்திற்கும் தாவா சொத்திற்கும் இடையே சுமார் 17 கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் 10 கிலோமீட்டர் இருக்கும். நான் 5ம் பிரதிவாதியை திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் 5ம் பிரதிவாதியை திருமணம் செய்ததால் தான் பிரதிவாதிகளின் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் முன்னோர் மற்றும் அவர்களது பங்காளிகளுக்கு இடையே தாவா சொத்துக்களை எப்படி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமான எழுத்துப்பூர்வமான உரிமை மூல ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தின் பழைய புல எண் மற்றும் தற்போதைய புல எண் என்று தெரியுமா என்றால் எஸ்.எல். ஆர் நகலில் 28/6 என்று தான் உள்ளது தற்போதும் அதே சர்வே எண் தான் உள்ளது **(சாட்சி தற்போது மாற்றி சர்வே எண் 26/8 என்று சாட்சியம் அளித்தார்).**

2. தாவா சொத்தின் தற்போதைய புல எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்துக்களுக்கு வாதி வகையறா பேரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்தில் சிலவற்றை கல்லுக் கால்கள் போட்டு பிரித்தும் அளவு கற்கள் போட்டு பிரித்தும் வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவாசொத்தில் எத்தனை மரங்கள் உள்ளது என்றால் அதில் மரங்கள் எதுவும் இல்லை. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவாசொத்தை பார்வையிட்டால் அதில் என்ன உள்ளது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். ஒட்டுமொத்த தாவாசொத்திற்கும் மேற்கே தெண்ணீர்வயல் கிராம எல்லை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கே ஒரு குளக்கால் உள்ளது என்றால் சரியல்ல. தெற்கே என்ன உள்ளது என்றால் வேறு நபர் பெயரில் பட்டா இடம் உள்ளது யார் பெயரில் என்று எனக்கு நினைவில் இல்லை. மேற்படி தாவா சொத்திற்கு தெற்கே உள்ள இடத்தில் வீடு உள்ளதா அல்லது காலி இடமாக உள்ளதா என்றால் காலி இடமாக தான் உள்ளது.

3. தாவா சொத்திற்கு வடக்கே வாதிகளின் வீடு மற்றும் முள்ளிக்குண்டு கிராம குடியிருப்புகள் உள்ளது என்றால் வடக்கு குளக்கால் தான் உள்ளது. **(சாட்சியிடம் சிறு மருதூர் குரூப்பின் புலப்படம் காட்டப்பட்டது)** என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் சர்வே எண் 26/8க்கு தெற்கே குளக்கால் உள்ளதா என்றால் புலப்படத்தில் உள்ளது. மேற்படி புலப்படத்தில் சர்வே எண் 26/8 மேற்கே தெண்ணீர்வயல் கிராம எல்லை காட்டப்பட்டுள்ளது

என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் அந்த புலப்படத்தில் ஒரு வீடு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புலப்படத்தில் காட்டப்பட்டுள்ள வீட்டில் தான் வாதியின் முன்னோர் அருள்பிள்ளை கட்டி குடியிருந்து வந்த வீடு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி புலப்படத்தில் தாவா சொத்திற்கு தெற்கே உள்ள குளக்காலுக்கும் தெற்கே ஒரு வட்டக்கிணறு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து என் மாமனாருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான உரிமை மூல ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் பட்டா தான் உள்ளது. அதை தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரிதான்.

4. எனது மாமனார் அவர்களின் முன்னோர் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் எனது மாமனாரின் தந்தை பெயர் சுப்புராமன். அவருடைய தந்தை பெயர் பெரியய்யா அவருடைய தந்தை பெயர் எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக தெண்ணீர்வயல் சுப்புராமன் என்பவரின் மனைவி காளியம்மாள் தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி சட்ட நடவடிக்கை எடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 11.7.1974 தேதியில் எனது மாமனார் பூமிநாதன் பெயரில் எதன் அடிப்படையில் பட்டா வழுங்கப்பட்டது என்றால் எஸ்.எல்.ஆர் –ல் எனது மாமனார் பெயரில் மேற்படி சொத்து இருந்ததால் பட்டா வழுங்கப்பட்டது செட்டில்மெண்ட் ரெஜிஸ்டரில் எனது மாமனார் பெயரில் தாவா சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. எஸ்.எல்.ஆர் –ல் உள்ள பெரியய்யா மகன் சுப்புராமன் என்பவர் வாதிகளின்

முன்னோருக்கு கிரயம் கொடுத்த தெண்ணீர்வயல் பெரியய்யா மகன் சுப்புராமன் தான் குறிக்கும் என்று சொன்னால் சரியல்ல. அசலாக செட்டில்மெண்ட் பட்டா வழங்கும் பொழுது எனது மாமனார் பெயர் இல்லை என்றும் 1963–ஆம் ஆண்டு ரீ செட்டில்மெண்ட் என்ட்ரி மூலமாக தான் எனது மாமனார் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

5. மேற்படி ரீ செட்டில்மெண்ட் என்ட்ரி ஏற்பட்ட காலத்தில் எனது மாமனார் பெயரில் எதன் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். திருமணவயல் பேரணி அம்பலம் என்பவரின் குடும்பத்தார்கள் எனக்கு உறவினர்கள் தான் என்று சொன்னால் சரியல்ல. 1918 ,1927,1963,1964 ஆவணங்களில் தாவா சொத்து சம்பந்தமான தெளிவான நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1964 ஆம் ஆண்டு வாதியின் முன்னோர்கள் தெண்ணீர்வயல் பெரியய்யா மகன் சுப்புராமன் என்பவரிடம் தாவா சொத்தை கிரயம் பெற்று விட்டார்கள் என்றும் அதனால்தான் 1977 ஆம் ஆண்டு நிலவுடைமை குறிப்பேடு திட்டத்தின் கீழ் அவருக்கு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஜமீன்கால வருவாய் கணக்குகளிலும், செட்டில்மெண்ட் வரி விதிப்பு காலங்களிலும், நில உடமை குறிப்பேடு திட்டத்தின் காலத்திலும், நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் காலத்திலும் வருவாய் கணக்குகளில் தாவா சொத்து வாதியின் முன்னோர்களின் பெயரில்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

6.	வாதிகளின் முன்னோர் சரியான முறையில் தான் தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளார்கள் என்றும் பிரதிவாதிகள் செட்டில்மெண்ட் கணக்கில் தவறுதலாக தங்கள் பெயரை சேர்த்துள்ளனர் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியம் இல்லை என்றும் நான் பிரதிவாதிகளுக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.02.26 17:06:37 +0530